வட இலங்கையில்
தரமான
தொழிற் கல்விக்கு
தலைசிறந்த நிறுவனம்

JAFFNA
TECHNICAL
INSTITUTE

52/1, STANLEY ROAD
(Near Railway Crossing)
JAFFNA
B/1760

Registered as a Newspaper in Sri Lanka    விலை ரூபா: 1.00

# ஈழமுரசு

EELAMURASHU

முரசு 4    12-03-87    வியாழன் (மாசி 28)    றஜப் - 11    முழக்கம் - 34

தொழிற் பயிற்சி

RADIO & T. V.
TECHNOLOGY
COMPUTER
PROGRAMMING
(Basic, Cobol)
WIRING & WINDING

பயிற்சிகள் ஆரம்பம்
15-3-87

JAFFNA
TECHNICAL
INSTITUTE
B/1760

## எரிபொருள் தடை மறுபரிசீலனை; தடுப்புக் காவலில் உள்ளவர்களை விடுவிக்க யோசனை

(கொழும்பு)

யாழ்ப்பாணக்குடா நாட்டிற்கு விதிக்கப்பட்டுள்ள எரிபொருள் தடையை நீக்குவது பற்றி பரிசீலனை செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் யாழ். குடா நாட்டுக்கு எதிரான எரிபொருள் தடைபற்றி மறுபரிசீலனை செய்வதற்குக் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இதேசமயம் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களில் குற்றச்சாட்டுக்கள் எதுவும் சமத்தப்பட முடியாத நிலையிலுள்ளவர்களையும் நாற்பதுவயதுக்கு மேற்பட்டவர்களையும் விடுதலை செய்வதற்குத் துரித நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

யாழ். குடாநாட்டிற்கெதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள எரிபொருள் தடை

(6ஆம் பக்கம் பார்க்க)

# திருமலையை அபகரிக்க அரசு இடைத்தேர்தல் நடத்த திட்டம்!

(நமது அரசியல் நிருபர்)

திருக்கோணமலைப் பகுதியிலிருந்து தமிழ் மக்களை இராணுவ நடவடிக்கையினாலும் காடைத்தனத்தினாலும் விரட்டியடித்ததைத் தொடர்ந்து இப்பாது திருக்கோணமலை தமிழ் மக்களின் தாயகத்துள் இடம்பெறவில்லையென்பதை உலகநாடுகளுக்கு எடுத்துக் காட்டுமுகமாக அங்கு குடியேற்றப்பட்ட சிங்களவர்களைப் புதிய வாக்காளர்களாகப் பதிந்து இடைத்தேர்தலை நடத்தி ஒரு சிங்களவரைப் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்வதற்கு சிறிலங்கா அரசு தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது.

யாழ்ப்பாணக் குடாநாடு தவிர்ந்த வடக்கு கிழக்கு மாகாணங்களில்அரசின்கட்டுப்பாட்டிலுள்ள தேர்தல் தொகுதிகளில் காலியாக உள்ள இடங்களுக்கு விரைவில் இடைத்தேர்தல் நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

திருக்கோணமலை, முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சித் தொகுதிகளிலிருந்து தமிழ் மக்கள் பலர் வெளியேறியுளளதால் இத்தொகுதிகளில் இடைத்தேர்தலை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் குறிப்பாக புதிய வாக்காளர் பட்டியலை அவசர அவசரமாகத் தயாரித்து திருமலைத் தொகுதியில் இப்பொழுது ஆயுதப்படைகளின் உதவியுடன் குடியேற்றப்பட்டுள்ள சிங்களவர்கள் மூலம் ஒரு சிங்களவரை இத்தொகுதியிலிருந்து தெரிவு செய்து திருககோணமலையைத் தமிழ்ப் பிரதேசமல்லவென்று காட்டுவதற்கான ஒரு திட்டமே இது வென்றும் தமிழ் மக்கள் கருது

(6ஆம் பக்கம் பார்க்க)

## பொய்ப்பிரசாரத்தில் மக்கள் ஏமாறலாகாது!

(யாழ்ப்பாணம்)

இராணுவத்துக்கும் தமிழ் ஈழவிடுதலைப் புலிகளுக்குமிடையே உக்கிரமான போர் குடாநாட்டில் பல பாகங்களிலும் நடந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் போராட்டத்தை மழுங்கடிக்கும் வகையில் பொய்யான பிரசாரத்தை மேற்கொள்பவர்கள் மீது மக்கள் கவனமாக இருக்கும்படி தமிழீழ விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

குறிப்பாகப் பாடசாலை

(6ஆம் பக்கம் பார்க்க)

## டிரக் தடம் புரண்டு ஏழு ராணுவம் பலி!

(கொழும்பு)

அனுராதபுரத்திலுள்ள சாளியாபுர இராணுவ முகாமிலிருந்து பதவியாவை நோக்கி ட்ரக் வண்டியில் சென்ற இராணுவத்தினர் ஏழு பேர் கொல்லப்பட்டனர்.

ட்ரக்வண்டி வேகமாகச் செல்லுகையில் தடம் புரண்டதால் வண்டியில் இருந்த இருபது இராணுவத்தினரும் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கும், கொழும்பு ஆஸ்பத்திரிக்கும், கொண்டு செல்லப்பட்டனர். இதில் இருவர் அனுராதபுரம் ஆஸ்பத்திரியிலும் ஐவர் கொழும்பு ஆஸ்பத்திரியிலும் இறந்தனர். மேலும் பலர் ஆபத்தான நிலையில் உள்ளனர். ச)

## மாட்டுத் திருடன் மாட்டினன்

(யாழ்ப்பாணம்)

அரியாலையில் களவாடிய மாடுகளை இறைச்சிக்காக வெட்டுவதற்கு கொண்டுவரும்போது பிடிக்கலாம் என கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தவர்கள் வண்டிலில் பூட்டியபடி வந்த ஒருசோடி மாடுகளை சந்தேகததில் சோதனையிட்டபோது அவையும் களவாடிக்கொண்டு வரப்பட்டவை என்பதனைக் கண்டுபிடித்தனர். இம்மாடுகளை வண்டிலில் பூட்டி வந்த நபர் யாழ் முஸ்லிம பிரதேச

(6ஆம் பக்கம் பார்க்க)

## இப்படியும் புத்தி ஜீவிகள்

இராணுவ நடவடிக்கைகளால் யாழ்ப்பாணப் பகுதிகளில் நாளாந்தம் காயமுற்று சிகிச்சைக்காக யாழ். அரசினர் வைத்திய சாலையில் அனுமதிககப்படுபவர்களுக்கு இரத்ததானம் செய்யுமாறு விடுவிக்கப்படுகின்ற வேண்டுகோளை யேற்று தினமும் பலர் இரததானம் வழங்கி வருகின்றார்கள்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியிலும் இவ்வேண்டுகோள் விடப்பட்டதை யேற்று பலர் இரத்ததானம் வழங்கினார்கள். ஆனாலும் சில மாணவர்களும, மாணவிகளும "விடுதலைப் புலிகளுககாயின்" நாம் இரத்ததானம் செய்யமாட்டோம் என்று கூறித் தமது அலுவல்களைக் கவனிக்கச் சென்றனர்.

## சிறுநீரக நிவாரண நிதி; லியோகிளப் பதிலில்லை!

திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் வேண்டுகோளை ஏற்று திருமதி அகிலாண்டேஸ்வரி நடராஜா என்னும் பெண்மணிக்கு சிறுநீரக மாற்றுச் சிகிச்சை அளித்து அவரின் உயிரைக் காப்பாற்றுவதற்கு பொதுமக்களிடமிருந்து 'ஈழமுரசு' நிதி திரட்டுவதற்கு முன்வந்தது.

தமிழ் மக்களிடமிருந்து கருணை வேகமாகச் சுரக்கும் என்று எதிர்பார்த்தோம். எதையும் ஆறஅமரச் சிந்தித்துப் பழக்கப்பட்டதனாலோ என்னவோ அகிலாண்டேஸ்வரியை வெளிநாட்டுக்கு அனுப்பி சிகிச்சையளிக்கத்தேவையான நிதி சேருவதற்கு முன்னரே அகிலாண்டேஸ்வரியின் ஆவி பிரிந்துவிட்டது.

இந்த அபலைத் தாயின் உயிரைக் காப்பாற்றுவதற்கு நிதி

(6ஆம் பக்கம் பார்க்க)

## மேல் நடவடிக்கை வேண்டும் எனகிறார் ஜனார்த்தனன்

(சென்னை)

இலங்கைத் தமிழர்களைப் படுகொலையிலிருந்தும் பட்டினிச் சாவிலிருந்தும் மீட்க

(6ஆம் பக்கம் பார்க்க)

## நாவற்குழியில் ஐந்தாம் நாளும் மோதல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி இராணுவம் முன்னேற எடுககும் முயற்சி நேற்றும் நடைபெற்றது. ஆனாலும் விடுதலைப் புலிகள் கடுந்தாக்குதலை தொடர்ச்சியாக நடாத்திக்கொண்டிருக்கிறார்கள். நேற்றும் விடுதலைப் புலிகளின் தாக்குதலால் இரா

(6ஆம் பக்கம் பார்க்க)

பிரயாண ஒழுங்குகள் GLORIA TRAVELS ★ AUSTRALIA ★ GERMANY ★ FRANCE ★ ITALY

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன், எமது பிரயாண முகவர் உடன் அழைத்துச் செல்வார். மற்றும் பாஸ்போட், பொண்ட் (Bond), விசா ரிக்கற் ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

சவுதி அரேபியா கிளினேர்ஸ் 25 வயதுக்கு மேற்பட்டவர்கள் தேவை.

GLORIA TRAVELS சின்னத்தம்பி அவெனியூ, மானிப்பாய். ——> எமக்கு வேறு கிளைகள் கிடையாது. B/2012

# பாலியல் உறவு இன்று சாகச விளையாட்டாகியுள்ளது

(கொழும்பு)

திருமணம், பாலியல் வாழ்வு பற்றிய பூரண அறிவற்ற "ரீன ஏஜர்கள்" (20 வயதுக்கு உட்பட்டவர்கள்) ஒரு சாகச விளையாட்டாக பாலுறவு நவடிக்கைகளில் ஈடுபடுவது அவர்களுக்கும் சமுதாயத்துக்கும் பெரும் கேடுகளை விளைவிக்கும் காரணமாக உள்ளது. இதனால் எமது இளைய தலைமுறையினரிடையே நிறைமறைந்த குழந்தைப் பேறுகள், சிசுக்கள், இளம் தாய்மார்கள் ஆகியோரின் மரண அதிகரிப்பு, பாலுறவின் மூலம் தொற்றும் நோய்கள் என்பன அபாயகரமான அளவில் பரவி உள்ளன. இவ்வாறு இலங்கைக் குடும்பதிட்ட சங்கத்தின் பணிப்பாளரில் ஒருவரான டாக்டர் சிறியானி பஸநாயக்கா கூறியுள்ளார். இளம் தலைமுறையினர் இவ்வாறு திருமணத்துக்கு முன்னர் பாலுறவில் ஈடுபடுவதால் அவர்களின் திருமண வயது ஏறிக்கொண்டே போகிறது. பாலியல் கல்வியறிவற்ற இள வட்டங்களின் இந்த நடவடிக்கைகளினால் அபாயகரமான கருச்சிதைவுகள், ஆண்களிடையே மலட்டுத் தன்மை என்பனவும் அதிகரித்து வருகிறது.

எனவே இளைய தலைமுறையினர் மனிதர்களின் பாலியல் நடவடிக்கைகள் பற்றிய பூரண அறிவுடையோராக மாற உதவிகள் செய்யப்படல் வேண்டும். இந்த அடிப்படையான அறிவு இல்லாமையால் தான் சந்தோஷமற்ற குடும்ப வாழ்க்கை அமைந்து விடுகிறது என்றும் கண்டறியப்பட்டுள்ளது. பாலியல் பற்றிய அறிவீனங்கள்தான் பல மனோதத்துவ ரீதியான குழப்பங்களையும் குடும்ப வாழ்வில் உண்டாக்கி விடுகின்றன என்றும் கூறியுள்ளார்.

## எதிர்ப்பியக்கம் நாளை கூட்டம்

( யாழ்ப்பாணம் )

மனித உரிமைகள் வெகுஜன இயக்கத்தின் ஆலோசனைக் கூட்டம் ஒன்று நாளை இயக்க தலைமையகத்தில் நடைபெறும்.

இன்றைய நெருக்கடி நிலையில் மனித உரிமைகள் மீறல்களுக்கு எதிராக பிரார்த்தனை, உண்ணாவிரதம், சத்தியாக்கிரகம் உட்பட எதிர்ப்பியக்கங்களை எவ்வாறு முன்னெடுப்பது பற்றி இக் கூட்டத்தில் ஆராயப்படும்.

# இரத்ததானம் வழங்குவதில் யாழ். பல்கலை முண்டியடிப்பு!

(யாழ்ப்பாணம்)

உயிருக்காகப் போராடும் எமது சகோதரர்களுக்கு உதவ வேண்டும் என ஈழமுரசு விடுத்த கோரிக்கையை யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மிக்க அக்கறையோடு தமது கவனத்துக்கு எடுத்துள்ளார்களென ஈழமுரசு நம்புகிறது.

நேற்று ஒழுங்கு செய்யப்பட்ட இரத்ததான வைபவமொன்றில் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்கள், மாணவர்கள், ஊழியர்கள் என நூற்றுக்கணக்கானோர் பாதிக்கப்படும் அப்பாவிப் பொதுமக்களுக்கான விலைமதிப்பற்ற தமது பங்களிப்பை வழங்க முன் வந்தனர்.

பல்கலைக்கழக நிர்வாகமும், மாணவர் அவையும், மறுமலர்ச்சிக்கழகத்தினரும் ஏற்பாடு செய்த இந்த இரத்ததானத்தில் பலர் தமக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லையென்று கவலை தெரிவித்தனர். இவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குவதற்காக மீண்டும் ஒரு முறை இரத்ததானம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## பாலர் கல்விக் கருத்தரங்கு

( யாழ்ப்பாணம் )

பாலர் கல்விக் கழக ஆதரவில் பாலர் கல்விக் கருத்தரங்கு ஒன்று எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ் - வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறும்.

பாலர்பாடசாலை ஆசிரியர்கள் அழைக்கப்படுகிறார்கள்.

## தடுப்புக்காவலில் 3 சிப்பாய்கள்

(கொழும்பு)

மூன்று இராணுவத்தினர் பொலிசாரின் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுடைய இன்னொரு கூட்டாளியைத் தேடி பொலிசார் வலைவீச்சு. அனுராதபுரம் இராணுவ முகாமைச் சேர்ந்த இவர்கள் ஹோட்டல் ஒன்றுக்கு மதுபோதையில் சென்று பெண்கள் இருக்கிறார்களா என்று கேட்டு கலாட்டா செய்தார்களாம். ஹோட்டல் நிர்வாகத்தின் முறைப்பாட்டினையடுத்து இவர்கள் மீது பொலிசார் நடவடிக்கை எடுத்துள்ளார்கள்.


### பிரயாண ஒழுங்குகள்

சவுதி - OPEN VISA

சவுதி - TRAILOR டிறைவர் (25 வயதுக்கு மேல்)

ஆகிய நாடுகளுக்கான வேலைவாய்ப்புகள் செய்துகொடுக்கப்படும்.

அத்துடன் பாஸ்போட், பொண்ட், ரிக்கற்றிங் ஆகியன செய்துகொடுக்கப்படும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

**யூனிவேர்சல் ஏஜென்சி**

125, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமையில் பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)

B/1995



### வரிவிளம்பரம்

CLASSES

IDP ஸ்தாபனத்தால் Computer Programming Course, Modern Education Centre (கரவெட்டி) ஊடாக அதிதரத்துடன் நடாத்தப்படுகின்றன.

R/30788

வாடகைக்கு

திருநெல்வேலிச் சந்திக்கருகே கடையொன்று வாடகைக்குள்ளது. தொடர்புகொள்க விளம்பரதாரர் M79, மே/பா dyn ads. 476, பிரதான வீதி, சுண்டுகுளி (சென்ற். ஜோன்ஸ் கல்லூரி முன்பாக)

B/2038


## பிறந்த நாள் வாழ்த்து

★ சாவகச்சேரி கெருடாவில், மகாதேவன் ஈஸ்வரி தம்பதிகளின் புதல்வன் மயூரன் இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

★ ராசாவின் தோட்டம், மாரியப்பன் ராஜபூபதி தம்பதிகளின் புதல்வி உதயகுமாரி இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

★ சுழிபுரம் சூரியவளவு சின்னத்தம்பி-இலட்சுமி தம்பதிகளின் மகள் செல்வராணி நேற்று தனது பதினொராவது பிறந்த நாளைக் கொண்டாடினார்.

★ இமையாணன் புலவர் வளவடி துரைசிங்கம்-தவமணி தம்பதிகளின் மகன் பிரதீபன் நேற்று தனது ஏழாவது பிறந்த நாளைக் கொண்டாடினார்.

## ராணுவத்துக்கு தண்ணீர்த் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி முகாம் இராணுவம் குடிதண்ணீரை முகாமுக்கு அருகில் உள்ள வீட்டுக் கிணறொன்றில் பெற்று வருவதாகத் தெரிகிறது.

இதுவரை காலமும் கைதடியில பெற்று வந்தார்கள். அங்கிருந்து நீர் பெறுவதற்கு தடை ஏற்படுத்தப்பட்டதும் அன்ரூஸ் தொழிற்சாலையில் இருந்து பைப் மூலமாக நீர் பெற்று வந்தனர். எனினும் இது சிரமமாகவும், போதிய நீர் பெற வாய்ப்பில்லாமலும் இருந்து வந்தது.

எனவே, தற்போது முகாமுக்கு எதிரில் உள்ள வீட்டுக் கிணற்றிலிருந்து நீர் பெறுகின்றனர். (ச)

## இன்று முதல் இலட்சார்ச்சனை

(கொழும்புத்துறை)

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய இலட்சார்ச்சனை இன்று பன்னிரண்டாம் திகதி வியாழக்கிழமை காலை ஏழு மணிக்கு ஆரம்பமாகி நடைபெற இருக்கிறது. விசேட சங்காபிஷேகமும், பூசையும், இரவுத் திருவிழாவும், சிறப்பாக நடைபெற ஆலயத் தேவஸ்தானம் ஏற்ற ஒழுங்குகளைச் செய்துள்ளது.

பதின்மூன்றும் திகதி வெள்ளிக்கிழமை மாசிமகத்தன்று காலை ஒன்பது மணிக்குத் தீர்த்தம் நடைபெறும்.


### HORIZON ENTERPRISES

**பிரயாண ஒழுங்குகள்!**

★ குவைத் ★ சவூதி ★ டோகா கட்டார் ★ மாலைதீவு

ஆகிய நாடுகட்கு நாம் குறிப்பிட்டபடியே உங்களது பயணத்திற்கான ஒழுங்குகள் செய்துதரப்படும். பணிப்பெண்களுக்கான பிரயாண ஒழுங்குகள் குறைந்த கட்டணத்தில் துரித கெதியில் மேற்கொள்ளப்படும். எமது முகவர் நிலையத்தினால் பயணம் மேற்கொள்வோர் பெயர் விபரங்களை வாரந்தோறும் வெளியிடுகிறோம். கடந்தவாரம் பயணம் மேற்கொண்டோர் விபரம். இவ்வாரம் பயணம் மேற்கொள்வோர் விபரங்கள் அடுத்தவாரப் பத்திரிகையில். நாம் மத்தியகிழக்கு நாடுகளுக்கான ஒழுங்குகள் மட்டுமே மேற்கொள்கிறோம். எமக்கு வடபகுதியில் வேறுகிளைகள் கிடையாது. எமமுடன் தொடபுகொள்வோர் முத்திரை ஒட்டிய கவருடன் தொடர்புகொள்ளவும்.

1. தம்பிராசா வசந்தராசா புலவனூர் வேன் கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.
2. ஜேபஸ் பவஸ்ரின் ராசநாயகம். இளவாலை மேற்கு இளவாலை.
3. கதிரவேலு சருணநிதி இணுவில் மேற்கு சுண்ணாகம்.
4. நல்லதப்பி மகேந்திரகுமார் நெடுந்தீவு மேற்கு, வாட் நம்-3, நெடுந்தீவு.
5. கந்தசாமி தவராசா, துன்னாலை தெற்கு, கரவெட்டி.
6. நாகேந்திரன் பாலசுப்பிரமணியம், விளையாட்டு மைதான வீதி, கோப்பாய் தெற்கு.
7. ஐயம்பிள்ளை சத்தியவதி கட்டுக்காணி ஒழுங்கை, சாவகச்சேரி.
8. ஐயாத்துரை நடராஜா லலிதாம்பிகை, சுதுமலை வடக்கு, மானிப்பாய்.
9. ராகினி ராசரட்ணம், சுதுமலை வடக்கு, மானிப்பாய்.
10. அன்ரனி ஞானமுத்து செட ஞானமலர், அம்மன் வீதி, பண்டத்தரிப்பு.

யாழ். முகவர்:
A. பத்மதாஸ்
மதுரா வீடியோ கிளப்,
இல: 96, 4ஆம் குறுக்குத்தெரு.
சின்னக்கடை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி, 23549

கொழும்பு முகவரி:
Horizon Enterprises,
No: 87-2/1, 2nd Floor,
Kollupitiya Lane,
Kollupitiya,
COLOMBO-3.
Telephone: 574000

R/30790



### எவர்விஷன்

**EVERVISION**

உங்கள் இல்லங்களில் நிகழும் மங்கள வைபவங்களை பலவருட அனுபவம் பெற்றவர்களால் மிக நவீன கமராக்களின் துணையுடன் தரமாக வீடியோ படமாக்கிட தவறாது நாடுங்கள்

எவர்விஷன்
21A, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(ஏமாற்றத்தைத் தவிர்க்க முந்திக்கொள்ளுங்கள்)

B/2025



### பிரயாண ஒழுங்குகள்

★ கனடா, ★ ஜேர்மனி, ★ இத்தாலி ★ லண்டன்

12-ம் திகதி எமது முகவர் அழைத்துச் செல்வார்

சவூதி அரேபியா: யம்போ காபர் கூலியாட்கள் 75 பேர் உடன் தேவை

| சவூதி கொம்பனி | | தேவையான ஆட்கள் |
|---|---|---|
| 1. Construction Helpers | — | 30 |
| 2. Cleaners | — | 25 |
| 3. Masons | — | 07 |
| 4. Heavy Vehicles Drivers | — | 0[illegible] |
| 5. Light Vehicles Drivers | — | 03 |
| 6. Electrician | — | 02 |
| 7. Plumbers | — | 03 |
| 8. Welders | — | 0[illegible] |

Hospital Cleaners — ஆண், பெண் இருபாலாருக்கும் 20ம் திகதி பயணஒழுங்குசெய்யப்படும். மற்றும் ★ சவூதி, ★ குவைற், ★ சிங்கப்பூர் பணிப்பெண்கள் உடன்தேவை. பாஸ்போட், பொண்ட், (BOND) உடனுக்குடன் செய்து தரப்படும்.

**V.M Balassingam**
குறூப் அட்லாந்திக் ரவல்ஸ்
163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(புதிய நிர்வாகத்தில் இயங்குகின்றது)

B/2009

### உதய சிந்தனை

நம் சகபிறவிகளுக்கு நாம் செய்யக்கூடிய மிகக் கொடிய துரோகம், அவர்களை வெறுப்பது அல்ல; அவர்களிடம் அசட்டையாய் இருப்பதே. அதுவே மனிதத்தன்மையற்ற நிலையின் சாரம். — ஜார்ஜ் பெர்னட்ஷா


# இதயமுரசு

12-03-1987 வியாழக்கிழமை (அக்ஷய) மாசி 28


# "முரண்பாட்டு மூட்டையின் முதுகெலும்பற்ற செயல்கள்!"

பூனை கண்ணை மூடிக்கொண்டால் பூலோகம் இருண்டு போகுமா?

பூலோகம் விழிப்புடன்தானிருக்கிறதென்பதை சிறிலங்கா என்ற கள்ளப் பூனைக்கு இப்போது ஆர்ஜன்டைனா என்ற லத்தீன் அமெரிக்க நாடு உணர்த்தியிருக்கிறது.

"பயங்கரவாதத்திலிருந்து ஒழித்துக் கட்டுவதற்கு" அவதாரமெடுத்துள்ள இரட்சகராகிய அமெரிக்க அதிபர் றீகனுக்கும், அவருக்கு உறுதுணையாகக் கைகொடுக்கும் பிரிட்டனின் மாக்கரட் தாட்சருக்கும், இலங்கையில் பிரிவினைவாத மார்க்ஸியப் பயங்கரவாதிகளை ஒழிப்பதற்குத் தாம் போராடிக் கொண்டிருப்பதாகக் காட்டிக் கொள்வதில் சிறிலங்கா தர்மிஷ்ட அதி உத்தமர் இதுவரை வெற்றி பெற்றிருக்கலாம்.

அமெரிக்கா, பிரிட்டன், இஸ்ரேல், தென்னாபிரிக்கா, பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளிடமிருந்து படைக்கல உதவியும் படை பல ஆலோசனை உதவிகளும் பெற்றுக் கொள்வதில் தர்மிஷ்ட அரசு வெற்றி பெற்றிருக்கிறது.

பாலஸ்தீனியரின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்து ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசங்களிலிருந்து இஸ்ரேலியர் வெளியேற வேண்டுமென்று அறிக்கைகள் விட்டு அரபு நாடுகளின் ஆதரவையும் தேடும் அதே சமயம் இஸ்ரேலிய மொஸாட்டின் உதவியுடன் இங்கு கிழக்கில் முஸ்லிம்களினதும் தமிழரினதும் நிலங்களையும் சுரண்டுவதற்கு தமிழ்பேசும் மக்களை அழித்து ஒழிப்பதிலும் தர்மிஷ்டம் இதுவரை வெற்றி பெற்றிருக்கிறதென்று சொல்லலாம்.

தென்னாபிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கையைக் கண்டித்து கூட்டறிக்கைகள் விடுவதிலும் தென்னாபிரிக்காவுக்கு எதிரான பொருளாதாரத் தடைத் தீர்மானத்தை ஆதரித்தும் அதே சமயம் தென்னாபிரிக்காவிலிருந்து கவசவாகனமும் ஆயுதங்களும் பெற்று இலங்கையில் தமிழினத்தை ஒழிப்பதிலும் தர்மிஷ்ட அரசு இதுவரை வெற்றி ஈட்டியிருக்கலாம்.

"இலங்கையின் இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண்பதில்தான் நாங்கள் ஆர்வம் கொண்டுள்ளோம். இந்தியாவின் மத்தியஸ்தம் எங்களுக்கு எப்போதும் தேவை. நாங்கள் தமிழ் மக்களுக்குக் கொடுக்கக்கூடிய அளவு கொடுத்து விட்டோம். எந்த அரசும் கொடுக்கக் கூடியதைவிட ஆகக்கூடுதலானவற்றைக் கொடுத்து விட்டோம். இதற்கு மேல் எந்தச் சலுகையும் கொடுக்க முடியாது. பயங்கரவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நாங்கள் தயார்."

இப்படி முன்னுக்குப் பின் முரணாக ஒவ்வொன்றையும் சொல்லி கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக இந்திய அரசாங்கத்தையும் அதன் தலைவர்களையும் பேய்க்காட்டி வந்ததில் இது வரை தர்மிஷ்டரின் அரசு வெற்றி பெற்றிருக்கலாம்.

வடக்கு கிழக்கில் அரசு எடுக்கும் இராணுவ நடவடிக்கை நாட்டின் ஒரு பகுதியைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் ஆயுதந்தாங்கிய ஒரு குழுவினரான தமிழ்த் தீவிரவாதிகளுக்கு எதிராகவேயன்றி தமிழ்ப் பொதுமக்களுக்கு எதிரானதல்ல என்று அமைச்சர் தொண்டமானை தமிழ்நாட்டிலிருந்து கூற வைத்ததிலும் தர்மிஷ்டர் வெற்றி பெற்றிருக்கலாம்.

தொண்டமானின் பச்சைக் கொடியும், ஆளும் கட்சியின் கையசைப்பும் மறுநாளே யாழ்நகரில் இருபத்தைந்துக்கு மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் உயிரைப் பலிகொண்டதுடன் பலரை ஊனமாக்கியும் உடமைகளைச் சேதப்படுத்தியிருந்தும் "பொதுமக்கள் பாதிக்கப்படவில்லை அப்படிப் பாதிக்கப்பட்டிருந்தாலும் அதற்குப் பயங்கரவாதிகளே காரண"மென்று கூறிச் சிங்களப் பொதுமக்களை ஏமாற்றுவதிலும் வெற்றி பெற்றிருக்கலாம்.

செஞ்சிலுவைச் சங்கத்தினரையோ, உலக மனித உரிமை அமைப்பினரையோ இங்கு வர விடாமல் தடுப்பதிலும் இது வரை வெற்றி பெற்றிருக்கலாம்.

தாம் விரும்பிய பத்திரிகை நிருபர்களைத் தாமே விரும்பிய இடங்களுக்குக் கூட்டிச்சென்று காண்பித்து உண்மைக்கு மாறானவற்றை உலகுக்கு எடுத்துக்காட்டுவதிலும் இதுவரை தர்மிஷ்ட ஆட்சி வெற்றியீட்டியிருக்கலாம்.

ஆனால் பொய்யும் புரட்டும் பித்தலாட்டமும் என்றுமே வெற்றிபெற முடியாது.

இலங்கையிலிருந்து வெகுதூரத்துக்கு அப்பால் லத்தீன் அமெரிக்காவிலுள்ள ஆர்ஜன்டைனா என்னும் நாடு இலங்கையில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அட்டூழியங்களை ஐ. நா. மனித உரிமைக் கமிஷன்முன் கொண்டு வந்திருக்கிறது உண்மையை நேரில் சென்று ஆராய்வதற்கு மனித உரிமை அமைப்பின் பிரதிநிதிகளை, செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதிகளை அனுப்ப வேண்டுமென்றும் இதற்கு இலங்கை அனுமதிக்க வேண்டுமென்றும் பிரேரணை கொண்டுவந்திருக்கிறது.

"பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு என்று கூறி சிறிலங்கா அரசு உலகை ஏமாற்றுகிறது" என்று அருகேயுள்ள தமிழ் நாட்டின் உணவு அமைச்சர் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

பஞ்சாப் பிரச்சனையுடன் இலங்கை இனப்பிரச்சனையை ஒப்பிடுவது விஷமத்தனமானது; குட்டையைக் குழப்புவது என்று இந்திய மத்திய இணை அமைச்சர் நடவர்சிங் பாராளுமன்றத்திலேயே அறிவித்திருக்கிறார்.

உலகம் உண்மையை உணரத் தொடங்குகிறது. கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்குத் தான்"

# காலாவதியாகிவிட்ட கூட்டணியும் பொல்பொட் ஆட்சியும் ஒரே நோக்கா

இன்று தமிழர் விடுதலைக் கூட்டணி சட்ட முறையான ஒரு ஜனநாயக அமைப்புத் தானா?

ஸ்ரீலங்கா நாட்டின் 'பருவ கால' வெளியீடாக உள்நாட்டு வெளிநாட்டுப் பத்திரிகையின் நகைச் சுவைக் கிண்டலுக்கு இலக்கான 1978-ம் வருட அரசமைப்புத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆறாவது திருத்தத்தின் ஆதாரத்தில் இக் கேள்வி முன் வைக்கப்படவில்லை!

காரணம் ஸ்ரீலங்கா நாட்டின் அரசமைப்பு தமிழீழ நாட்டிலுள்ள ஒரு ஜனநாயக அமைப்பை சட்டமுறையானதா அல்லவா என்பதைத் தீர்மானிப்பதற்கு நியாயாதிக்கம் உடையதல்ல என்பதே போராளிகளதும், தமிழீழ ஆதரவாளர்களதும் நிலைப்பாடென்பதால்!

எந்தவொரு ஜனநாயக அமைப்புக்கும் ஒரு அமைப்புத்திட்டம் அதாவது யாப்பு இருக்க வேண்டும். அந்த அமைப்பு விதிகளுக்கு அமைந்தும் அவற்றில் மீறுதல்கள் புரியாதும் இயங்கும் வரை மட்டுமே அது ஒரு சட்ட முறையானதும் ஒழுங்கானதுமான ஜனநாயக அமைப்பாக இருக்கமுடியும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாப்பின்படி அதன் தேசிய மாநாடும், உத்தியோகத்தர் தெரிவுகளும் ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் நிகழ்ந்திருக்க வேண்டும். அல்லாவிடில் நெருக்கடி நிலைமைகளை எதிர்கொள்ளுவதற்கான புறநடையான ஏற்பாடுகள் ஏதும் அதில் யாப்பில்) காணப்பட்டிருத்தல் வேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைத்துவ பதவிகளோ, அல்லது அதன் பொதுச் சபை, மத்திய செயற்குழு அல்லது அதன் உயர் மட்ட கொள்கை வகுப்புக் குழுவான பொலிட்பியுரோ உறுப்பினர் பதவிகளோ ஜீவியகால பதவிகள் அல்ல.

ஆகவே, 1983 யூலையில் நடைபெற்ற அதன் மூன்றாவது தேசிய மாநாட்டுக்குப் பின், அதனது யாப்பின் பிரகாரம் தனது தேசிய மாநாட்டை தமிழ் ஈழத்திலோ அல்லது பொதுச் சபை உறுப்பினர்கள் பலரும் கலந்து கொள்ள வசதியற்ற வகையில் ஸ்ரீலங்கா நாட்டின் தலைநகரில அதன் முக்கிய பொதுச் சபைக் கூட்டங்களை முன்னர் நடத்திய பாங்கில் தமிழீழத்துக்கு வெளியேயாவது அது தனது தேசிய மாநாட்டை வெறும் பம்மாத்தாகத்தானும்கூட்டி ஒப்புக்காவது இயக்கத்தின் உத்தியோக பதவிகளுக்கும், பொதுச் சபை, மத்திய செயற்குழு மற்றும் பொலிற்பியுரோ உறுப்பினர் பதவிகளுக்கு யாப்பு விதித்துள்ள பிரகாரம் தெரிவுகளை நடாத்தி இருத்தல் வேண்டும். அப்படி எதுவும் நடைபெற்றதாகத் தகவல் கிடையாது.

அந்த முறையில் பார்த்தால் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உத்தியோகத்தர் பதவிகளும் பொதுச்சபை, மத்திய செயற்குழு மற்றும் பொலிற்பியூரோ உறுப்பினர் பதவிகளுமெப்போதோ காலாவதியாகி வெற்றிடங்களாக உள்ளன. தமிழர் விடுதலைக் கூட்டணியின் அமைப்பு விதிகளின் படி பாராளுமன்றத் தேர்தல் தொகுதிகளே அதன் மூலக் கிளைகளாக அமைந்துள்ளன. மேலும் அதே யாப்பின் பிரகாரம் தேர்தல் தொகுதிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களோ, பாராளுமன்ற உறுப்பினர் யாரும் பிரதிநிதிகளாக இல்லாத தொகுதிகளில் அதில் தமிழர் விடுதலைக் கூட்டணியினால் வேட்பாளராக நிறுத்தப்பட்டவரே மூலக் கிளைகளின் அமைப்பாளர்களாகவிருப்பர்.

1983 ஜூலை மாதத்தில் கடைசியாகக் கூட்டப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூன்றாவது தேசிய



மாநாடு மேற்கொண்ட தீர்மானத்தின்படி 1983 ஆகஸ்ட் மாதத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது பதவிகளைத் துறந்திருத்தல் வேண்டும். ஆகவே அதே பிரகிருதிகள் எவ்வாறு தமிழர் விடுதலைக்கூட்டணியின் மூலக்கிளைகளின் அமைப்பாளர்களாகவும் அந்த ஆதாரத்தில் கூட்டணியின் பொறுப்பு வாய்ந்த பதவிகளிலும் ஒட்டிக்கொண்டிருக்கலாம்.

ஆலாலசுந்தரம், தருமலிங்கம், செல்லத்தம்பு, கணேசலிங்கம் ஆகிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களது மறைவுக்குப் பின் அவர்களுடைய ஸ்தானங்களுக்கு சம்பந்தப்பட்ட மூலக்கிளைகள் அமைப்பாளர்களே இல்லாது ஸ்தம்பித்துப் போயுள்ள நிலையில் தன்னை ஒரு ஜனநாயக அமைப்பு என்று வர்ணித்துக்கொள்ளும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப் பீடத்தில் உள்ளோர் மட்டுமல்லாது அதன் பொதுச்சபை, மத்திய செயற்குழு, பொலிற்பியுரோ உறுப்பினர்களும் மான உணர்வுடையோராக இருப்பின் தத்தம்பதவிகளைத்தாமாகவே துறந்திருத்தல் வேண்டும். மாறாக காலாவதியாகிவிட்ட பதவிகளில் ஜீவியகாலத்துக்கும் ஒட்டிக் கொண்டிருப்பது நியாயம் அல்ல! இந்நிலையில் நியூயோர்க் நகரில் நடந்த கருத்தரங்கில் கலந்து கொள்ளச் சென்ற இடத்தில் கம்பூச்சியாவின் "பொல்பொட் ஆட்சியின் சர்வாதிகாரத்தை" தமிழர் விடுதலைக் கூட்டணியின் 'ஜீவியகால' செயலதிபர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் நினைவு கூர்ந்திருப்பது வியப்பளிப்பதாகவே அமைகிறது. தமிழர் விடுதலைக் கூட்டணி தனது குறிக்கோளைக் கோட்டை விட்டு தமிழீழத்தை மீள்வித்துப் புனரமைப்பதற்கு தமிழீழ வாக்காளர்

**அரசு**

அளித்த ஆணையையும் மீறி அதிகாரங்கள் எதுவுமற்ற மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்காக அரசியல் சோரம் போனதன் பின்பும் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவ தாபனமாகத் தம்மைக் கருதுவதும் கருதிச் செயற்படுவதும் 'பொல்பொட் அரசின் போக்கிலேயே' அமைகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் மக்களின் விடுதலைக்காகவும், தமிழினத்தின் ஒற்றுமை கருதியும் செய்யக்கூடிய சிறந்த பணி தமிழர் விடுதலைக் கூட்டணி கலைக்கப்பட்டு விட்டதாகப் பகிரங்க அறிவித்தல் வெளியிடுவதே! ஜீவிய காலத் தலைமையை வெறுத்தவர்கள் அறிஞர் அண்ணாவும், தந்தை செல்வாவும்.

'தம்பி வா தலைமை தாங்க வா' என்று அழைத்து இரா. நெடுஞ்செழியனை இயக்கத்தின் கௌரவ செயலாளராக்கி மகிழ்ந்தவர் அண்ணா. அதே பாங்கில் தலைவர்கள் வரிசையில் ஒன்றுக்கு மேற்பட்டவர்களைத் தலைமைப் பதவியில் அமர்த்தியவர் தந்தை செல்வா!

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் வரிசையில் கோப்பாய் கோமான் வன்னியசிங்கம், திருமலை இராஜவரோதயம், பட்டிருப்பு இராஜமாணிக்கம், இரும்பு மனிதர் டாக்டர் நாகநாதன், இறுதியாக அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் ஆகியோரைத் தம் வாழ்நாளின் போதே அமர்த்தி அவர்களுக்குக் கீழ் ஒரு சாதாரண உறுப்பினராகவோ அல்லது வேறு பதவிகளை ஏற்றோ இயக்கப் பணிக்குத் தம்மை அர்ப்பணித்தவர் தந்தை செல்வா.

தமிழீழம் முழுமையும் உள்ள மக்கள் இன்று தம்பியின் தலைமையை ஏற்றுக் கொண்டு தமிழீழ விடுதலை வேள்வியில் திளைத்து வருவது தெரிந்ததே! தந்தை செல்வாவின் வாரிசு என்று ஒரு காலத்தில் பகரப்பட்ட அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் கம்பூச்சியாவின் பொல்பொட்டாகத் தம்மை இன்று கருதிக் கொண்டு கற்பனை உலகில் சஞ்சரிக்கலாம். மு. சிவசிதம்பரம், திருமலை சம்பந்தன் போன்றோராவது தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற இல்லாத ஒரு அமைப்பிலுள்ள தமது பதவிகளைத் துறக்காது இலவுகாக்க வேண்டுமா? அது மக்களால் அறியப்பட்ட அவர்களது சுபாவத்துக்கு பொருந்துவதாகுமா? தமிழர் விடுதலைக் கூட்டணியின் அஸ்தமனம் பொல்பொட் அமிருடன் நிறைவு பெறுமாக என்பதே தமிழீழ விடுதலையை வாஞ்சிப்போரின் பிரார்த்தனையாகும்.

---

## கைதடியிலிருந்து வந்தவர் ஆஸ்பத்திரியில்!

(யாழ்ப்பாணம்)

கைதடியிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த ஒருவரை நாவற்குழி இராணுவம் சுட்டது. சூடுபட்டவர் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொழும்புத்துறையைச் சேர்ந்த நாகேஸ்வரன் கைதடியிலிருந்து வீடு நோக்கிக் கைதடி கோப்பாய் வீதியால் வந்து கொண்டிருந்த சமயம் நாவற்குழி இராணுவம் சுட்டது. இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு நடைபெற்றது (ச)

## இன்று திறப்பு

(யாழ்ப்பாணம்)

கைதடியில் வீர மரணமடைந்த விடுதலைப் புலிகளின் இராணுவ தொழில் நுட்பப் பிரிவுப் பொறுப்பாளர் கப்டன் சுதாகர் ஞாபகார்த்தமாக நிறுவப்பட்ட பஸ் தரிப்பு நிலையத் திறப்பு விழா இன்று நடைபெறும்.

தீவுப்பகுதி மக்களால் புங்குடுதீவு ஆஸ்பத்திரிச் சந்தியில் இந்நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

# பாகிஸ்தானுக்கு ஈடாக இந்தியாவும் அணுகுண்டு தயாரிக்க வேண்டும்

## இந்திய பாராளுமன்றத்தில உறுப்பினர்கள் கோரிக்கை

(புதுடில்லி)

இந்தியாவுக்கு பெரும் அச்சுறுத்தலாக விருக்கும் பாகிஸ்தானின் அணுகுண்டு தயாரிப்புக்குப் பதிலாக இந்தியாவும் அணுகுண்டு தயாரிக்க வேண்டுமென்று ராஜ்ய சபையில் உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்தனர். பாகிஸ்தான் அணுகுண்டுயுகத்துக்கு செல்வதை அமெரிக்கா தடுக்க வேண்டுமென்று ஒரு அமெரிக்க சஞ்சிகை தெரிவித்துள்ளது.

உலகில் பேரழிவை ஏற்படுத்தும் அணுகுண்டு யுகத்துக்கு இட்டு செல்லாது சமாதான சூழ்நிலையை உருவாக்க அமெரிக்க - சோவியத் அதிபர்கள் முயன்றபோதும் இறுதியில் அம் முயற்சி தோல்வியில் முடிந்தது. இதையடுத்து அமெரிக்கா அணுகுண்டு பரிசோதனை நடத்தியது. போட்டியாக சோவியத்தும் அணுகுண்டு பரிசோதனையை நடாத்தியது.

மக்கள் பேரழிவைத் தடுக்கும் அணுகுண்டை, அணு ஆயுத பரிவர்த்தனையை நிறுத்த வேண்டுமென்று அணிசேரா இயக்கம், ஐ நா சபை, காமன்வெல்த் நாடுகள் கோரி வந்தன.

தற்சமயம் அமெரிக்க உதவியுடன் பாகிஸ்தானும் அணு ஆயுதப் பரிவர்த்தனை, அணுகுண்டு தயாரிப்பு நடவடிக்கைகளில் இறங்கவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் இந்திய லோக் சபையில் நடந்த விவாதம் ஒன்றில் உறுப்பினர்கள் இந்தியாவும் அணுகுண்டு தயாரிப்புப் பரிசோதனையில் ஈடுபட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளது.

## ஆப்-பாக் பேச்சு உடன்பாடின்றி முடிவு

(ஜெனிவா)

ஆப்கான்-பாகிஸ்தான் நாடுகளுக்கிடையில் ஐ. நா. சபையில் நடந்த பேச்சுவார்த்தைகள் முடிவு எதுவுமின்றி முடிவடைந்தது. ஆனாலும் ஆப்கானில் உள்ள சோவியத் படைகள் ஒரு வருடத்தில் வெளியேறிவிடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானில் போர்நிறுத்தம் கொண்டுவந்த அதிபர் நஜிபுல்லா அங்கு சமாதானம் நிலவ கெரில்லாக்களையும் கொண்ட அரசாங்கம் ஒன்றை அமைக்க முன்வந்தார். ஆனல் இதற்கு இடையூறாக இருந்த சோவியத் படைகள் வெளியேற்றப்படவேண்டும் என்ற கோரிக்கை பற்றி ஆராய ஐ. நா. சபையில் பாகிஸ்தான், ஆப்கான் அதிகாரிகள் பேச்சு நடாத்தி வந்தார்கள். நேற்று முடிந்த பேச்சுக்கள் எந்த உடன்பாடும் எட்டாத நிலையில் முடிந்த போதும் விரைவில் மீண்டும் இரு நாட்டு அதிகாரிகளும் கூடுவார்கள் என்றும், ஒருவருட காலத்தில் சோவியத் படைகள் வெளியேறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மடகஸ்காரில் இனக்கலவரம் 14 இந்தியர் பலி, வீடுகள் சேதம்

(அன்றநாறியோ)

மடகஸ்காரில் ஆசிய மக்களுக்கும் நாட்டு மக்களுக்கும் இடையில் நடந்த இனக்கலவரததில் 14 பேர் கொல்லப்பட்டனர்.

மடகஸ்காரில் வியாபாரம் செய்துவரும் இந்திய, பாகிஸ்தான் மக்களுக்கு எதிராக அந்நாட்டு மக்கள் கொண்ட பொருமையால் பெரும் கலவரம் ஏற்பட்டது. ஆசிய நாட்டவர்கள் தம்மைவிட பெரும் தனவந்தர்களாகவாழ்ந்துவருவதையிட்டு அவர்களைத் தாக்கும் நடவடிக்கையில் இறங்கினர்.

இதில் பாரதத்தைச்சேர்ந்த 14 பேர் கொல்லப்பட்டனர். அத்துடன் அவர்களுக்கு உரிய 180 கடைகள், 200 வீடுகள் சேதமடைந்தன.

தொடர்ந்து 10 நாட்கள் நடைபெற்ற இக்கலவரங்களை பாதுகாப்புப்படையினர் கட்டுப்பாட்டில் கொண்டுவந்ததாகவும், ஐந்து நகரங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

### எவரெஸ்ட்டை மிஞ்சிய மலைச்சிகரம்

(நியூயோர்க்)

எவரெஸ்ட மலைச்சிகரம் உலகில் இனிமேல் உயரமான மலைச்சிகரம் அல்ல என்று அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். இமாலய மலைத் தொடரில் உள்ள கே-2 என்ற மலைச்சிகரம்தான் உலகிலேயே உயரமானதாகும். அமெரிக்க செய்மதியொன்றின் தகவலின்படி எவரெஸ்ட் 8847 மீற்றர் உயரமென்றும், கே-2 என்ற மலைச்சிகரம் 8908 மீற்றர் உயரமானது என்றும கண்டறியப்பட்டுள்ளது

### அமெ-சோவியத் அதிபர்கள் சந்திக்கலாம்

(ஜெனிவா)

ஐரோப்பிய சமூக நாடுகளில் நடுத்தர ஏவுகணைகளைத் தவிர்க்க வேண்டும் என்ற சோவியத் அதிபரின் ஆலோசனை குறித்து சோவியத்-அமெரிக்க அதிகாரிகள் தொடர்ந்து ஆராய்ந்து வருகிறார்கள்.

கடந்த ஒருவாரமாக ஆராயப்பட்டு வரும் இவ்விடயம் குறித்து பெருமபான்மையான நாடுகள் வரவேற்றுள்ளன.

இப் பேச்சு வார்த்தை முடிவில் சோவியத்-அமெரிக்க அதிபர்கள் சத்தித்துப் பேசலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

### பிரிட்டிஷ் பிரதமரின் சோவியத் விஜயம்

(லண்டன்)

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தட்சர் இமமாதம் இறுதியில் சோவியத்யூனியனுக்கு மேற்கொள்ளும் விஜயம் முக்கியமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**செய்-தி-மதி**

### கிழக்கே செல்லும் மேற்கு இராணுவம்

(ஹம்பேர்க்)

மேற்கு ஜேர்மனி இராணுவ அதிகாரிகள் பார்வையாளர்களாக கிழக்கு ஜேர்மனி 'வர்சர்' இராணுவ ஒத்திகையில் கலந்து கொள்ளலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்கு ஜேர்மன் இராணுவ அதிகாரிகள் போலந்து, செக்கோஸ்லோவேக்கியா நாடுகளுக்கு சென்று இராணுவ ஒத்திகைகளில் கலந்து கொண்டிருந்தனர்.

கிழக்கு ஜேர்மனுக்குச் செல்லாது இருந்த மேற்கு ஜேர்மனி இராணுவ அதிகாரிகள் அடுத்த வாரம் செல்லவிருக்கின்றனர்.

### ராஜீவுக்கு ஈழவேந்தன் யோசனை!

( சென்னை )

''இலங்கை அரசின் ஆதரவாளர்களான அமெரிக்கா, இங்கிலாந்து, சீன, இஸ்ரேல், தென் ஆபிரிக்கா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளும் ஒன்ருக கூட்டாகச்சேர்ந்து திருமலையில் தளம் அமைத்து இந்தியாவுக்கு எதிராகச் செயல்படக் கூடிய சூழ்நிலை உருவாகிறது. ஆகவே இச்சதி முயற்சியை முறியடிக்க இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு எழுதிய கடிதத்தில் தமிழீழ விடுதலை அணித் தலைவர் ஈழவேந்தன் தெரிவித்துள்ளார்.

### கடத்தலில் விமான ஊழியர்கள்

(லண்டன்)

கடந்த ஆறு மாதங்களில் பெரும் கடத்தலில் ஈடுபட்டதாகச் சந்தேகத்தில் முப்பது விமான நிலைய ஊழியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விமான நிலைய ஊழியர்கள் 5100 டொலர் பெறுமதியான போதைவஸ்து போன்ற மற்றும் பொருட்களை கடத்தியதாக பொலிசார் கைது செய்துள்ளனர். இவர்கள் மூலம் பல முக்கிய கடத்தல் விடயங்கள் வெளிவந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

### பணயம் வைப்போர் பற்றி ஐ. நா. முடிவு

(ஜெனிவா)

உலக நாடுகளில் பணயம் வைப்பவர்களை விடுவிக்க ஐ. நா. முயலவேண்டும்.

இப்படியான தீர்மானம் ஒன்று ஐ. நா. சபையில் நிறைவேற்றப்பட்டது.

பிரான்ஸ் கொண்டுவந்த பிரேரணையில், இன்று உலக நாடுகளில் மக்களை சிறுசிறு விடயங்களுக்கெல்லாம் பணயம் வைக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது. இந்நிலையில் ஐ. நா. போன்ற அமைப்புகள் பணயம் வைப்பவர்களை விடுதலை செய்ய உதவ வேண்டும் என்று கேட்டிருந்தது.

இப்பிரேரணை நிறைவேறியது.

### ரஷ்ய - தமிழ் அகராதி வெளியீடு

(மாஸ்கோ)

சோவியத் நாட்டின் ''ருஸ்சி யாஜித்'' என்னும் பதிப்பகம் ரஷ்ய-தமிழ் அகராதி ஒன்றை வெளியிட விருக்கிறது.

ரஷ்ய மொழியை உலகில் உள்ள சகல மொழி மக்களும் அறிய வாய்ப்பளிப்பதற்காகஇப்பதிப்பகம் 1987ஆம் ஆண்டில் இருந்து நூற்றுக்கணக்கான அகராதிகளை வெளியிட்டிருந்தது.

அடுத்த ஆண்டில் வெளியிடப்படவிருக்கும் ரஷ்ய-தமிழ் அகராதியில் 2000-க்கு அதிகமான சொற்கள் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஸ்ரீலங்கா அனர்த்தங்களும் அதன் பின்னரும் - 20

# தமிழர்களை அகதிகளாக்குவதே அரசின் நோக்கம்

**SRI LANKA: THE HOLOCAUST AND AFTER**
By L. Piyadasa 1984 Marrom Books, 101 Kilburn Square, London Nw 66 PS

தமிழில்
எம். சிவானந்தன்

### ஜேரனியின் வாய்ச்சாலம்

20 ஆகஸ்ட் 1983 எக்கொனமிஸ்ட் சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் நிதியமைச்சர் ஜேரனி டி மெல் இக்கலவரத்தை நியாயப்படுத்த முயன்றுள்ளார். இலங்கையின் சகல நல்ல நிலைகளையும் தமிழர்களே தமது அதிகாரத்தில் வைத்திருந்தனர் என்று கூறியுள்ளார். இதன் மூலம் அவர் சிங்களவருக்குரிய இடத்தைக் கொடுக்க எடுக்கப்பட்ட முடிவு என்றும் கூறுகின்ருர். எந்த நிதி மந்திரிதான் இந்த அழிவுகளை நியாயப்படுத்த முடியும? இனவாத அடிப்படையில் ஜேரனி டி மெல்லின் கரையார் சமூகம் அரசியல், பொருளாதாரம் ஆகிய துறைகளில் அளவுக்கதிகமாக ஆதிக்கம் செலுத்துகிறது இவருடைய இந்த அடாவடித்தனங்களை இவரால் சமர்ப்பிக்கப்பட்ட 1984 ஆம் ஆண்டு பட்ஜெட், பாதுகாப்பு அமைச்சின் செலவினத்தை 1982 இல் இருமடங்காக்கியமை, 1984ஆம் ஆண்டு பட்ஜெட்டில் துண்டுவிழும் தொகையான2300கோடி ரூபா ஆகியவற்றில் காணலாம். அரசின் தமிழரை ஒடுக்கும் போக்கானது நாட்டைக் குட்டிச் சுவராக்குவதிலேயே முடியும்.

### இலங்கை மக்கள் இழக்கப்போகும்சங்கதிகள்

கலவரத்துக்கு முந்திய பொருளாதார அழிவுகளின் விபரங்களை, உடனடியாக விபரிக்க முடியாமையாலுல், அவற்றை இங்கு குறிப்பிடவில்லை. எஸ்மண்ட் விக்கிரமசிங்க, சிறில் மதத்யூ, காமினி திசாநாயக்கா ஆகியோரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பொருளாதார அம்சங்கள் முன்னேற்றமடைய அதிகளவு பெறுமதி வாய்ந்த சங்கதிகளை இலங்கைப் பிரஜைகள் ஏற்றுக் கொள்ளவேண்டிவரும்.

### இலங்கையரின் குழப்பநிலை

ஈழ ஆதரவுக் குழுக்களின் பிரச்சாரங்களால் பல நாடுகளிலுள்ளவர்கள் அதிர்ச்சிக்குள்ளாக்கப்பட்டதுடன், சில நாடுகளிலுள்ளவர்கள் அதனை ஏற்று ஆதரவும் கொடுககிருர்கள். இதுவரையில் தரப்பட்ட தகவலகளிலிருந்து இந்தக் கலவரத்துக்கான மாறுபட்ட பின்னணிகளை உடைய வரலாற்றை நீங்கள் ஊகித்திருப்பீர்கள். மக்கள், வித்தியாசமான கருத்துக்களினுல் குழம்பியுள்ளதால் இலங்கையர்களின் பிரச்சனைகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள மறுத்துவருகிருர்கள் என்பதுதான் பெரிய ஆபத்தாகும். இவ்வாறு நடக்காதென நம்புகிறேம்.

### தமிழரை அகதிகள் ஆக்குவதே நோக்கம்

தமக்கு ஆதரவான வெளிநாடுகளில் இருந்து உதவிகள் பெறும் இலங்கை ஆளும் வர்க்கத்தினர் பெருமளவு இலங்கையர்களை அகதிகளாக்குவது என்ற நோக்குடனேயே செயற்பட்டுவருகின்றனர் என்றே நமது ஆய்வுகளின்படி முடிவு கூறுகிறேம். பௌத்த சிங்கள சிந்தனைவாதிகள் தமிழர்களும், முஸ்லிம்களும், பறங்கியரும், சிங்கள கிறிஸ்தவர்களும் வேறு நாடுகளில்வதிவிடம் தேடமுடியுமென்று தமது பிரச்சாரங்களில் கூறிவருகிருர்கள். இப்படியான கருத்து முட்டாள்தனமாகஇருந்தபோதும்மத்தியூவும், அவரது சகபாடிகளும் இவற்றை உண்மை என்றே நம்புகின்றனர். இலங்கையை சிங்கள பௌத்தர்களின் புனிதபூமியாக மாற்றியே வருகிருர்கள். எனவே இந்தக் கோட்பாடுகள் குறைந்தபட்சம் 45 லட்சம் அகதிகளை உருவாக்கும். இதனை ஐ. நா. சபை சவனமாகப் பரிசீலிக்க வேண்டும். இந்த நடவடிக்கைகளை நிறுத்த நாம் இலங்கையில் தீவிரமாகப் போராட வேண்டும் நாம் இந்தப் போராட்டத்தைச் செய்யும் பொழுது ஐ. நா. சபையும் அதன் மற்றகிளைகளும் இந்த அகதிகள் உருவாகும் பிரச்சனையை நிறுத்த தமது முழுப் பலத்தையும் உபயோகிக்க வேண்டும். (தொடரும்)

# 3 முகாம்களுக்கு தேவையான பொருட்கள்

# கப்பல் மூலம் குவிப்பு!

(விசேட நிருபர்)

யாழ் - கோட்டை ராணுவ முகாம், மண்டைதீவு 'மினி' நாவற்குழி முகாம்களைப் பலப்படுத்தும் நோக்குடன் நேற்றுக் காலையும் மேலும் மூன்று கப்பல்களில் ஆயுதம், உணவு, தளபாடப் பொதிகளுடன் ராணுவத்தையும் கொண்டு வந்து குவிக்கும் வேலைகள் நடைபெற்றன.

கடந்த மாதம் 26ஆம் திகதி நான்கு கப்பல்களில் இவ்விதம் பெருந்தொகைப் பொருட்கள் கொண்டு வரப்பட்டது, 'ஈழமுரசு' வாசகர்கள் அறிந்ததே!

பதின்மூன்று நாட்களுக்கு உள்ளாக நேற்று முன்தினம் ஒரு கப்பலில் ஆயுதங்களும், ராணுவமும் கொண்டு வரப்பட்டதை அடுத்து நேற்றுக் காலையில் மேலும் மூன்று கப்பல்களில் பொருட்களும், படைகளும் கொண்டு வரப்பட்டது இதுவே முதல் தடவையாக இப் பகுதியில் நிகழ்ந்துள்ளது.

இயந்திரப் படகுகளில் சிறுத்தீவு ஆற்றுவாயினூடாக பொருட்கள் 'மினி' முகாமுக்கு எடுத்துச் செல்லப்பட்டதும் ட்ரக்குகள், கவச வாசனங்களில் கோட்டைக்கு எடுத்துச் செல்லும் வேலைகள் நேற்றுப் பகல் துரிதமாக நடைபெற்றன. நாவற்குழி முகாமுக்குரிய பொருட்களை இரு ஹெலிகொப்டர்கள் பல தடவைகளில் வந்து எடுத்துச் சென்றன.

நேற்றும், நேற்று முன்தினமும் கப்பல்களின் வருகையால் பாஷையூர், மண்டைதீவு, மீனவர்கள் தத்தமது பட்டிகளில் மீன், றால் பிடித்துவர முடியவில்லை. குருநகர் இறங்குதுறை ஊடாக மண்டைதீவுக்குச் சென்றுவரும் பிரயாணிகள் பாதிக்கப்பட்டதுடன் தீவுப் பகுதிக்கு எடுத்துச் செல்லப்படும் உணவு வகைகளையும் கொண்டு செல்வதற்குமுடியவில்லை என்றும் அறிவிக்கப்படுகிறது.

ராணுவத்திற்கான பொருட்களை எடுத்துச் செல்லப்படுகையில் வழக்கமாக மேற்கொள்ளப்படும் மண்டைதீவு, சிறுத்தீவுக் கரைகளிலான பாதுகாப்பிலும் பெருந்தொகை ராணுவம் நேற்றைய தினம் ஈடுபட்டிருந்தது.

# வரலாற்றுக் கோலம்

14-ம் லூயி தொடக்கம் சில ஐரோப்பிய மன்னர்கள் தனிப்பட்ட படை ஒன்றை வைத்திருந்தார்கள். குடிமக்களை இம்சைப்படுத்தினாலும் இப்படை வீரர்கள் பற்றி மன்னனிடம் முறையிட முடியாது..

முறிகண்டியில் கடந்தமாதம் அழிக்கும் படை வந்து கொண்டிருந்தது. இதில் ஆயிரக்கணக்கான வீரர்கள் ஓய்வு எடுத்தனர். என்னைப் பார்த்து ஒரு போர் வீரர் குறிக்கப்பட்ட ஒரு வவுனியாக் கடையில் 2 சாராயப் போத்தல்களைத் தாம் வைத்ததாகவும் அதை எடுக்க நாளை வருவதாகவும் அதை நான் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொண்டது.

இன்னொரு படைவீரருடன் கதைத்தேன். தன்னுடைய நவீனரகத் துப்பாக்கி 750 ரவுண்ட் சுடும் என்ருர். ''முடிந்தபின்பு என்ன செய்வீர்கள்; புலி வந்தால் ஆபத்தே'' என்றேன். எங்களுக்குக் ''ஹெலி'' போடும் என்ருர், அந்த ஆமிக்காரன்.

தனக்கு 23 வயது என்றும் 3 பிள்ளைகளின் தகப்பன் என்றும் வறுமையில் வாடும் தனது குடும்பத்தை வாழ வைக்க இந்தப் பக்கம் வந்ததாகவும் சொன்னுர். மீண்டும் உயிருடன் வீட்டே போனுல் மனைவியும் உயிருடன் இருப்பாள். இன்றேல் குடும்ப அங்கத்தவர்கள் யாவரும் தற்கொலை செய்வர் என்ருர்.

இன்னொரு ஆமிக்காரன் ரகசியமாகச் சொன்னுன் இது லலித்தின் தனிப்பட்ட படை.

— அதிசயன் —

# தீவுப்பகுதியில் தொழுநோய்

## பற்றிய ஆய்வு; 98 பேர் கண்டுபிடிப்பு

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் தொழுநோய் தீவிரமாகப் பரவுகிறது. இதுவரை நடத்தப்பட்ட வைத்திய பரிசோதனை ஆய்வுகளின் இறுதியில் 98 பேருககு இந்நோய் இருப்பதாகக் கண்டுபிடிக்கபபடடுள்ளது.

பரிசோதனைகள் நடத்தப்பட்ட பாடசாலைகளிலும் சில வட்டாரங்களிலும் கூர்ந்து ஆய்வு செய்தால் இத்தொகை மேலும் அதிகரிக்கலாம் என்று சுகாதாரப் பகுதியினர் தெரிவிக்கின்றனர்.

தற்போது தொழுநோயால் பீடிக்கப்பட்டோரெனக் கண்டு பிடிக்கப்பட்ட 98 பேரில் 45 பேர் மட்டுமே ஒழுங்காகச் சிகிச்சை பெற்று வருகின்றனர்; ஏனையோர் சிகிச்சை பெருது மறைந்து வாழ்வதாகவும், இவர்களுக்குச் சிகிச்சையளிப்பதற்கான தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் சுகாதாரப்பகுதியினர் மேலும் தெரிவிக்கின்றனர்.

தொழுநோய், சொறி சிரங்கு போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டோரைக் கண்டறியும் பொருட்டுப் புங்குடுதீவில் உள்ள சகல பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் நோய்ப் பரிசோதனை முகாமொன்றினை மீண்டும் நடத்துதற்கு ஊர்காவற்றுறை வைத்திய சுகாதார அதிகாரி டாக்டர் திருமதி கே. கந்தசாமி நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

# மாணவர்களை வளர்ப்பதே ஆசிரியர்களின் கடமை

(யாழ்ப்பாணம்)

''தாம் வளர்த்தெடுத்த தமது மாணவக் குழந்தைகளை பிறர் போற்றக் காணபது தான் ஆசிரியர்களது சிறந்த இலட்சியமாகும். இந்த இலட்சிய நிறைவு எமது ஆசிரியர்களுக்கு இன்று கைகூடுவதற்குக் காரணமாக இருந்த எமது மாணவர்களை பாராட்டுகிறேன். சிறந்த மணமகனை மணம முடிததுக கொடுத்தது மாமன் வீட்டிற்கு வழியனுப்பும் தந்தைபோல் கல்லூரிகளுக்கு வாழ்த்தி அனுப்புவதில்மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.''

இவ்வாறு வண். இளையதம்பி தமிழ் ஆறும் ஆண்டு புகுமுகப் பரீட்சையல் சித்தியடைந்து பிரபல்யமான கல்லூரிகளுக்குச் செல்லும் மாணவர்களது பெற்ருேரால் அளிககப்பட்ட விருந்துபசாரத்தில் அதிபர் கா. கணேசதாசன் கூறினுர்.

மேலும் பேசும் பொழுது, இப் பாடசாலை ஆசிரியர்களின் சிறந்த வழிகாட்டலின் நிமித்தம் பரீட்சை எடுதத 32 மாணவர்களுள் 30 மாணவர்கள் சித்தியடைந்தமை பாராட்டக் கூடியதாகும என்ருர். ஆசிரியர்களுள் பலரும் பெற்ருேர்களும் பாராட்டுரையாற்றினுர்கள்.

இறுதயில்மாணவர்கள்பாடசாலை வளவில் பயன் தரும் மரங்களை நாட்டினுர்கள.

## மிருக பலி வேண்டாம

(புலோலி)

சரித்திரப் பிரசித்தி பெற்ற நாகர்கோவில் நரசிங்க வைரவர் ஆலய பொங்கல் விழாவிற்கு ஆலயத்தால் ஆடு, கோழிகள ஏற்றுக் கொள்ளப்படுவது இவ்வருடம் முதல் நிறுததபபட்டுள்ளது. இத்தகவலை ஆலய பரிபாலகர் திரு. ரீ. சந்திரசேகரம் அறிவித்துள்ளார். இவ் அறிவித்தலில் மேலும குறிபபிடப்பட்டுள்ளதாவது: முன்னர், இந் நரசிங்கவைரவர் ஆலய பொஙகலின்போது ஆடு, கோழிகள் பலியிடப்படுவது வழககமாக விருந்த போதும இவ்வாறு ஆடு,கோழிகள் பலியிடும் வழககம பலவருடங்களுககு முன்பே நிறுததபபட்டு விட்டது.

ஆனுல் சில பக்தர்கள் தங்கள் நேர்த்திக்கடன் எனக் கூறிப் பொங்கலன்று ஆடு, கோழிகளை ஆலயத்துககு கொணடு வருவதும் அந்த ஆடு,கோழிகள் விற்பனை செய்யபபட்டு விற்பனையால் கிடைக்கும் பணம் ஆலயததிற்குச் செலவிடபபட்டும் வநதுள்ளது. ஆனுல் இவ் வருடம் (1987) முதல் இந் நடைமுறையும் நிறுத்தப்படடுளளது.

## வருடாந்தக் கூட்டம்

வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன கோவல வருடாந்தப் பொதுக் கூட்டம் எதுர்வரும் பதினைநதாந்திகதி (15-3-87) ஞாயிற்றுககிழமை மாலை அறங்காவலர் சபைத் தலைவர் திரு. வா. ஐயாத்துரை தலைமையில நடைபெறவுள்ளது.

## புதிய அதிபர்

(நீர்வேலி)

நீர்வேலி அததியார் இநதுக் கல்லூரியின் புதிய அதிபராக திரு. வ. தங்கராஜா நியமிக்கபபட்டுள்ளார். முனபு கடமையாறறிய திரு. க. சிவசுப்பிரமணியம் அச்சுவேலி மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றபபட்டார். புதிய அதிபர் வரும் வரையான கால இடைவெளியில் உப அதிபர் திரு. வ. வியாகேசர் தற்காலிக அதிபராகவும் கடமையாற்றினுர் என்பது குறிப்பிடத்தக்கது.

## உடற்பயிற்சி போட்டிகள்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கொத்தணிப் பாடசாலையின் வருடாந்த உடற்பயிற்சிப் போட்டிகள் இம்மாதம் 19ம்திகதி(19.3 87) வியாழக்கிழமை காலை புங்குடுதீவு மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன. புங்குடுதீவு கொத்தணியில் இணைந்துளள பாடசாலைகள் இபபோட்டிகளில் பங்குகொள்ளவுள்ளன. இப் போட்டிகளில் முதலிடம் பெறும் குழுக்கள் யாழ். மாவட்டப் பாடசாலைகள் உடற்பயிற்சிப் போட்டிகளில் பங்கு கொள்ள அனுமதிக்கப்படும்.

புங்குடுதீவு கொத்தணி அதிபர் திரு. இ. ச, செல்லத்துரை இப போட்டிக்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார்.

## இவர்களின் கை வந்தகலை

மக்கள் வெளியேற்றத்தால் காலியான நிலையிலிருககும் பல வீடுகளிலிருநது பொருட்கள் பல திருட்டுப்போயுள்ளதாகக கவலைதெரிவிககப் படுகிறது. இராணுவ நடவடிககை சாரணமாகத் தமது வீடுகளை விட்டுவெளியேறிய கட்டுவன், குரும்பசிட்டி, குபபளான பகுதுகளைச் சேர்நத மக்கள் தமது வீடுகளைப் பார்க்கச் சென்ற சமயம் திருட்டு போன விடயம் அம்பலததிற்கு வந்துள்ளது.

வீடுகளில் பொருததபபட்ட நீரிறைககும் மோட்டார்கள் பலவும திருடபபட்டுள்ளதோடு அறுவடை செய்து வீட்டில் வைககபபட்டிருந்த வெங்காயம், செததல்மிளகாய் போனறன கூடக களவாடப்பட்டுள்ளதாம் - பகலிலும, இரவிலும் நடைபெறும் இத் திருட்டு நடவடிக்கைகளை திட்டமிட்ட ஒரு கோஷ்டியினரே செய்து வருவதாக நம்பபபடுகிறது.

# இளைப்பாறியோர் மதிக்கப்பட வேண்டும்

(விசேட நிருபர்)

''பாடசாலைகளின் இளைப்பாறிய ஆசிரியர்கள், அதிபர்களைக் கௌரவிக்கும் பண்பு வரவேற்கப்பட வேண்டும். இப்பாடசாலையின் பழைய அதிபரையும் இளைப்பாறிச் சென்ற ஆசிரியர்களையும் கௌரவித்து பாடசாலை அபிவிருத்தியில் அவர்களைப் பயன்படுத்துவது கண்டு நான் பெருமிதமடைகிறேன்.''

வட்டு - திருஞானசம்பந்தர் வித்தியாசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிக்கு பிரதம விருந்தினராகக் கலந்து உரை நிகழ்த்திய டாக்டர் எமில் அததனுசியார் மேற்கண்டவாறு தெரிவித்தார். வைபவத்திற்கு வித்தியாசாலை அதிபர் திரு. சு. சிவவாகீசர் தலைமை வகித்தார், திருமதி எமில் அத்தனுசியார் மாணவ மாணவிகளுக்கான பரிசில்களை வழங்கினுர்.

**ரொனிடிமெல் கூறுகிருர்**

# வெளிநாட்டுதவி குறைவு அரிசி உற்பத்தி வீழ்ச்சி!

(கொழும்பு)

இலங்கைக்குக் கிடைக்கும் வெளிநாட்டு உதவி சரி அரைவாசியாகக் குறைந்துள்ளது. அரிசி உற்பத்தி முப்பதுவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது. இவ்வாருக நிதிபற்ருக்குறையும், உற்பத்தி வீழ்ச்சியும் ஏற்பட்டுள்ள நிலையில் பாதுகாப்புச் செலவுக்கு மட்டும் அதிக பணத்தை ஒதுக்கியுள்ளோம். அப்படியானுல் நாட்டின் நிதி நிலைமை எவ்வாறு நல்லதாக இருக்க முடியும்? இவ்வாறு நிதி அமைச்சர் ரொனிடிமெல் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலக வங்கியின் சிரேஷ்ட அதிபர்கள் வருடத்தில் மூன்று அல்லது நான்கு முறை நாடுகளுக்கு விஜயம் செய்வார்கள். இமமுறை இவர்கள தென் கிழக்காசிய விஜயத்தின் போதே எமது நாட்டுக்கு வந்தார்கள்.

கடந்த வருடம் பாதுகாப்புச் செலவுக்காக பல தடவை குறைநிரப்பு பிரேரணைமூலம் நிதி ஒதுக்கினேம்.

நாட்டில் நிதி நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. நாட்டில் அமைதி ஏற்பட்டாலே எமது பொருளாதாரத்தைப் பாதுகாத்து வளர்க்க முடியும். (ச)

## செஞ்சிலுவை அடையாளம்

(காங்கேசன்துறை)

தெல்லிப்பழைப் பகுதியில் அடிக்கடி மேற்கொள்ளப்படும் விமான, ஹெலி தாக்குதலிலிருந்து தப்புவதற்கு ஆஸ்பத்திரிக கூரையில் 20அடி சுற்றளவுள்ள செஞ்சிலுவை அடையாளம் பொறிககும்படி சுகாதாரத்திணைக்களம் ஆலோசனை கூறியுள்ளது.

இதையடுத்துதெல்லிப்பழை அபசிலர் வைத்தியசாலை ஊழியர்கள் மேற்படி வைத்தியசாலையின் கூரை மீது ''செஞ்சிலுவை''ச் சின்னம் பொறிக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளனர்.

நவீன சகல வீட்டுத் தளபாடங்களுக்கும் ஆர்பிக்கோ மெத்தைகளுக்கும் 10% கழிவு
EXPO FURNISHERS (PVT) Ltd
Sivan kovil Junction
K. K S Road
Jaffna.



ஈழமுரசு

FOR YOUR QUALITY
FURNITURE
CONTACT OR VISIT
DILKA FURNITURE PALACE
234,236, K.K.S. Road,
Jaffna.

# கட்டுவன் குரும்பசிட்டி மயிலிட்டி பகுதியில் வெளியேறிய மக்கள் நிலை!

## இராணுவ அதிகாரிகளின் உறுதிபற்றி இன்று தெல்லிப்பளையில் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கைகளால் கட்டுவன் வறுத்தலைவிளன், குரும்பசிட்டி, மயிலிட்டி வடக்கு ஆகிய பகுதிகளிலிருந்து அகதிகளாக வெளியேறியவர்கள் அப்பகுதிக்குத் திரும்பி வருவதற்கு தம்மாலான உதவியைச் செய்ய முன்வருவதாகவும் அவ்விதம் மீண்டும் அப்பகுதிக்கு வரவிரும்பாதவர்கள் தமது உடமைகளைத் எடுத்துச் செல்வதற்கு அனுமதி அளிப்பதாகவும் உயர் இராணுவ அதிகாரிகள் நேற்றுத் தம்மைச் சந்தித்த உயர் அரச அதிகாரிகளுக்கும் பிரஜைகள் குழுக்கும் உறுதியளித்துள்ளனர். இது சம்பந்தமாகஇன்று வியாழக்கிழமை காலை பத்து மணியளவில் தெல்லிப்பழை தந்தை செல்வா வித்தியாலயத்தில் கூட்டம் நடைபெறவிருக்கிறது.

கட்டுவன், வறுத்தலைவிளான், குரும்பசிட்டி, மயிலிட்டி வடக்கு ஆகிய பகுதிகளில் இருந்து அண்மைய இராணுவ நடவடிக்கைகளால் குடிபெயர்ந்தவர்கள், அகதிகளாக உள்ளவர்கள் ஆகியோரது புனர்வாழ்வு சம்பந்தமாக. சம்பந்தப்பட்ட உயர் இராணுவ அதிகாரிகளை நாலுபேர் கொண்ட உயர்மட்ட அரசாங்க அதிகாரிகளும், வலிகாமம் வடக்கு பிரஜைகள் குழு அங்கத்தவர்களும் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினுர்கள்.

அங்கிருந்து குடிபெயர்ந்தவர்கள் தமது வீடுகளுக்குச் திரும்பி வரலாமென்றும் அதற்கு தம்மாலான உதவியைச் செய்துதர முன்வந்துள்ளார்கள் எனறும் வரமுடியாதவர்கள் தமது உடைமைகளை எடுத்துச் செல்வதற்கு அனுமதியளிப்பதாகவும் இராணுவ உயர் அதிகாரிகள் தமது விருப்பத்தைத் தெரிவித்துக்கொண்டார்கள். இவை சம்பந்தமாக கலந்தாலோசித்து, வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு, பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் இன்று வியாழக்கிழமை காலை பத்து மணியளவில் தெல்லிப்பழையில் உள்ள தந்தை செல்வா வித்தியாலயத்தில் கூடும்படி தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபரும், பிரஜைகள் குழு அங்கத்தவர்களும் கேட்டுக்கொள்ளுகின்றனர்.

இத்தகவலை யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

# காங்கேசன் துறையில் மேலும் இராணுவமும் பொதிகளும் குவிப்பு

(சுன்னுகம்)

மேலும் ஒரு தொகுதி இராணுவத்தினரையும், இராணுவ உபகரணங்களையும எடுத்துக்கொண்டு கப்பலொன்று காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. இக்கப்பலிலிருந்து இராணுவத்தினரையும், இராணுவப் பொருட்களையும் தரையிறக்குவதற்கு வசதியாக நேறறு முற்பகலில் ஹோட்டல் முகாமிலிருந்து ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டதுடன் கடலில் நிலைகொண்டுள்ள பீரங்கிக் கப்பல்களிலிருந்து கரையோரப் பகுதியை நோக்கிப் பீரங்கித் தாக்குதலும் நடத்தப்பட்டது. இத்தாககுதல்களால் பல வீடுகள் சேதமடைந்துள்ளன. ஷெல் குண்டொன்று கீரிமலைக்கு அண்மையில் விழுந்து வெடித்துள்ளபோதிலும மக்கள் தெய்வாதீனமாகத் தப்பினர். கீரிமலை, சேந்தாங்குளம் பகுதிகள் இத்தாக்குதல்களால் மோசமாகப் பாதிக்கப்பட்டன.

நேற்று முன்தினமும், அதற்கு முதல் நாளும் இராணுவ தேவைக்கான பல பொருட்கள் இராணுவத்தினரால் பலாலி முகாமுக்கு எடுத்துச் செல்லப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## தரையிறங்காத ஹெலி!

( யாழ்ப்பாணம் )

தமிழீழ விடுதலைப் புலிகள் நாவற்குழி இராணுவ முகாமை நோக்கி மோட்டார் ஷெல் தாக்குதலைத் தொடர்ந்து நடாத்துவதால் முகாமுக்குள் ஹெலிகொப்டர் வழக்கமாக இறங்கும் (ஹெலி பாடடில்) இடத்தில் இறங்காமல் முகாமின் வேறு வேறு இடங்களில் மிகவும்தாழ்வாக அந்தரத்தில் நின்று கொள்கிறது. இவ்வாறு நிற்கும்போது ஹெலியில் வரும் இராணுவத்தினர் நிலத்தில் குதித்துக் கொள்கின்றனர். கொண்டு வரப்படும் பொருட்களும் ஹெலியிலிருந்து தள்ளிவீழ்த்தபபடுகின்றன. (ச)

## போதைப்பொருள் விற்றவர் பிடிபட்டார்

(யாழ்ப்பாணம்)

போதைபபொருள் விற்பனை செய்த சில்லறை விற்பனையாளர் ஒருவர் நேற்று விடுதலைப் புலிகளினுல் கைது செய்யப்பட்டுள்ளார்.

போதைப்பொருள் விற்பனை செய்வது கண்டுபிடிக்கப்பட்டால் அவர்கள் தண்டிக்கப்படுவர் என விடுதலைப் புலிகள் முன்பு அறிவிததிருந்தது தெரிந்ததே.

நேற்று கைது செய்யப்பட்ட போதைப்பொருள் விற்பனை செய்த நபரை யாழ் முஸ்லிம் பிரதேச தமிழீழ விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர் நசீர் விசாரணை செய்து வருகிருர். போதைப்பொருள் விற்பனை செய்வது கண்டுபிடிக்கப்பட்டால் கடும் தண்டனை வழங்கப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

**பிரயாண ஏற்பாடுகள்**

★ லண்டன், ★ நோர்வே, ★ சவூதி அரேபியா

**சவூதி அரேபியாவிற்கு** பயணம் செய்ய பாஸ்போட் கொடுத்த அனைவரும் 14, 15ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும். அவர்களுக்கான பயண ஒழுங்குகள் யாவும் பூர்த்தி செய்யப்படடுள்ளது.

சவூதி அரேபியாவிற்கு கிளீனர்ஸ் ஆக 25 தொடக்கம் 40 வரை வயதுள்ளவர்கள் இம் மாதம் 25 ஆம் திகதிமட்டில் போவதற்கான ஒழுங்குகள் உடன்செய்து கொடுக்கப்படும். மேற்கண்ட விபரங்களுக்குதொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

“ஒமேகா ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்”
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
கிளை: வங்களாவடிச் சந்தி,
வேலணை.

B. 2035

## நாவற்குழி...

...ணுவத் தரப்பில் உயிரச்சேதங்கள் ஏற்பட்டுள்ளது. அன்ரூஸ் தொழிற்சாலையில் தங்கியுள்ள இராணுவம் சிறிது முன்னேற முடியாதபடி அங்கேயே நிற்கின்றது.

நாவற்குழி இராணுவத்தினர்க்கும் - புலிகளுக்குமான போர் நேற்று ஐந்தாம் நாளாகவும் தொடர்ந்து நடைபெற்றது. நேற்றும் ஹெலிகொப்டர் பறந்து சுட்டது. ஷெல் அடியும் நடைபெற்றது.

நேற்றைய போரில் இராணுவத் தரபபில் சிலர் இறந்திருக்கலாம் என்றும் தெரிகிறது. புலிகள் தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை.

இன்றும் மோதல் தொடர்ந்து நடைபெறும் என நம்பப்படுகிறது.

## எரிபொருள்...

பொருளாதாரத்தடை நடவடிக்கைகளை நீக்கவேண்டுமென்று இந்தியா வற்புறுத்தி வந்ததும் ஐ நா. மனித உரிமைக் கமிஷன்முன் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் பற்றியும் தமிழர்களுக்கு எதிரான பொருளாதாரத்தடை தமிழர்கள் எதுவித விசாரணையுமின்றித் தடுத்துவைக்கப்படடிருப்பது பறறியும் இந்தியாவும் ஆர்ஜன்டைனுவும எடுத்துக்காடடியதைத் தொடர்ந்துமே அரசு எரிபொருள்தடையை நீக்குவது பற்றிப் பரிசீலனை செய்யவும் தடுத்துவைக்கப் பட்டுள்ளவர்களில் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படாதவர்களையும் நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்களையும் விரைவில் விடுதலை செய்வதற்கு முன்வந்திருப்பதாகவும் கருதப்படுகிறது.

## பொய்ப்பிரசாரத்தில்...

மாணவர்களைப் பாடசாலைக்குச் செல்லாமல் அவர்களைப் பயங்கொள்ளச் செய்யும்வகையில் பொய்ப்பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மக்களை அவர்கள் வாழும் பகுதிகளிலிருந்து வெளியேறும்படியான பிரசாரங்களும் செய்யப்படுகின்றன.

இவைபோன்ற பிரச்சாரங்களைச் செய்யவேண்டாம் எனவும் இவ்வாறு பொய்யான பிரசாரங்களை மேற்கொள்பவர்கள் மீது மக்கள் கவனமாக இருக்கும்படியும் புலிகள் வேண்டுகின்றனர். (ச)

## திருமலையை...

...கின்றனர்.

சமீபத்தில் கிழக்கு மாகாணத்தை குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தை புதிய குடியேற்றததிட்டங்கள் குடிசன மதிப்பு ஆகியவைகளைக் கொண்டு புதியவரை படமொன்றை அரசு தயாரித்து வெளிநாடுகளுககு அனுப்பிப் பிரசாரம் செய்தது தெரிந்ததே. பங்களூரில் நடைபெறற 'சார்க்' மாகாநாட்டிலும் இந்த வரைபடம் விநியோகிக்கப் பட்டது தெரிந்ததே.

இபபொழுது திருக்கோணமலையிலும் முல்லைததீவு, வவுனியாத் தொகுதிகளிலிருந்து பல தமிழர்கள் விரட்டியடிக்கபபட்டு வெளியிடங்களில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்து உள்ளதாலும் படைகள்முகாம் கொண்டுளள இபபகுதிகளில் தமிழ்மக்கள் வாக்களிக்க முன்வரமாட்டார்களென்ற நோக்குடனும் இத்தொகுதிகளில் இடைத்தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கம் முன் வந்துள்ளதாகக் கருதப்படுகிறது.

## மாட்டுத்...

விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர் நசீரினுல் கைது செய்யப்பட்டுள்ளார்.

அரியாலை கண்டி வீதியில் வசிக்கும் முத்துக்குமாரு என்பவரின் வண்டில் மாடுகளை சென்ற ஐந்தாந்திகதி இரவு இனந்தெரிய தநபர்கள் களவாடிச்சென்றுவிட்டனர். இதனுல் இம்மாடுகளின் உரிமையாளர் பிள்ளைபோலவளர்த்த தனது மாடுகளைக் களவாடிச் சென்றவர் தந்துதவுமாறும், தான் நடவடிக்கை ஏதும் எடுக்கப்போவதில்லை என்றும்துண்டுப்பிரசுரம் மூலம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இதனைத் தெரிந்த விடுதலைப் புலிகளின் முஸ்லிம் பிரதேசப் பொறுப்பாளர் களவாடப்பட்ட மாடுகள் இறைச்சிக்காக வெட்டுவதற்கு வரும்போது கள்வனைப் பிடிக்கலாம் எனக் கண்காணிப்பில் சிலரை ஈடுபடுத்தினர்.

நேற்று வண்டிகளுடன் ஒரு சோடி மாடுகள் குறிப்பிட்ட இடத்தில் செல்லும் போது அதனை வழி மறிதது விடுதலைப் புலிகள் பரிசோதனையில் ஈடுபட்ட சமயம் அந்த இரு மாடுகளும் களவாடப்பட்டவை எனத்தெரிய வந்தது. வண்டிலைக் ஓட்டி வந்த யோகராசா என்பவா மாடுகளைத் திருடியதை ஒப்புக்கொண்டார். எனினும் இந்த மாடுகள் அரியாலை வாசியுடையதல்ல அவரின் மாடுகள் இறைச்சிக்காக ஏற்கெனவே கொல்லப்பட்டுவிட்டன.

மாட்டுத்திருடன்யோகராசா தற்போது முஸ்லிம் பிரதேசப் பொறுப்பாளர் நசீரினுல் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட் படுத்தப்பட்டுள்ளார். (ச)

## சிறுநீரக...

திரட்டித் தருவதற்கு முன்வந்த யாழ்ப்பாணம் லியோ கிளப்பினர் வீடுவீடாகச் சென்று நிதி திரட்டுவதற்கும் 'ஈழமுரசு'வின் உதவியைநாடினர். தயக்கம் எதுவுமின்றி 'ஈழமுரசு' இதற்கு உதவி செய்தது.

''திருமதி அகிலாண்டேஸ்வரியின் உயிரைக் காப்பாற்ற முடியாதுபோய்விட்டது ஆனுலும் அவர் பெயரில் நீங்கள் திரட்டிய பணத்தைக் கொண்டுவந்து தாருங்கள்' பணத்தையும் சேர்ந்த நிதியுடன் சேர்த்து அடுத்து என்ன செய்யலாம் என்பது பற்றி ஆலோசிப்போம்'' எனறு லியோ கிளப் நிர்வாகிகளுககு அறிவித்தோம். பல தடவைகள் இதுபற்றி நினைவூட்டினுேம். இன்றுவரை அவர்கள் பணத்தைக் கொண்டுவந்து தரவில்லை பதிலும் கூடத் தரவில்லை.

சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்காகச் சேர்ந்த நிதி விபரமும் அடுத்து அதுபற்றி என்ன செய்வதென்ற தீர்மானமும் லியோ கிளப் நிர்வாகிகள் தமது பணத்தையும் விபரத்தையும் ஒப்படைத்ததும் அன்பர்களுக்கு அறிவிக்கப்படும்.

நிர்வாகி,
ஈழமுரசு

## மேல் நடவடிக்கை...

முயற்சி எடுப்பதோடு மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தியை உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் டாக்டர் இரா. ஜனர்தனன் கேட்டுள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன், தமிழ் நாட்டின் சகல அரசியல் தலைவர்கள், இலங்கைத் தமிழர்களின அரசியல் தலைவர்கள் மற்றும் போராளி அமைப்புக்கள் போன்றவை, இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக வெளியிட்டுள்ள அறிக்கைகள் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தயக்கமின்றி நடவடிக்கை எடுக்க திரு. ராஜீவ் காந்திக்கு அனைத்து பலத்தையும் கொடுக்குமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம். நாவலர் வீதி, 140-ம் இலக்கத்திலுள்ள ஈழமுரசு அச்சகப் பிரிவில் 12-3-1987 வியாழக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி இலக்கம் 22437